


# மரணமே...

## உனக்கு என்னை பிடிக்கவில்லையா..?

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்

வெளியீடு: மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம், மனித உரிமைகள் மீட்பு.
தொடர்புக்கு: 95434 10000

# அனாதையாக விட்டுவிட்டாய்...



உனக்கும் எனக்கும் பிறந்த காதலை
கைக்குழந்தையாகவே
அனாதையாக விட்டு விட்டாய்!

இன்று காதல் உன் புடவை தொட்டிலில்
தூங்கிக் கொண்டு இருக்கிறது.

காதல் பசி எடுத்து அழும் போது
என்ன உணவு கொடுக்க வேண்டும் என
எனக்கு தெரியவில்லை!

காதல் தூங்காமல் இருக்கும் போது
என்ன செய்து தூங்க வைப்பது என்று
எனக்கு தெரியவில்லை!

காதலை முத்தம் இட்டால்
வெட்கப்படுவது இல்லை!

காதலை தொடப் போனால்
சிணுங்குவது இல்லை!

காதல் இடம் கவிதை சொன்னால்
என் நெஞ்சில் சாய்வது இல்லை!

காதல் ஒவ்வொரு நாளும்
உன்னை நினைத்து அழுகிறது!

காதலிடம் என்றைக்காவது
ஒரு நாள் உன்னை பார்க்க வருவேன்
என்று ஒரு வார்த்தை சொல்லி விடு...

நீ என்னை விட்டுப் போய்விட்டாலும்
வருத்தப்படாமல்
உன் பின்னாலேயே வருகிறது
நம் காதல்!

நீ என்னை ஏமாற்றியது
நம் காதலுக்கு தெரியவில்லை

அதனால் தான் அது இன்னும்
உன்னையே காதலித்துக்
கொண்டிருக்கிறது

நீ மறந்ததை எண்ணி
என்னை விட அதிகம் கலங்குவது

என் இதயத்தில் இருக்கும்
நீ தான்

நான் சின்ன வயதில்
காதல் தோல்விகளே
விரும்பியது இல்லை

ஆனால் போட்டியை
விரும்பினேன்!

இப்பொழுது
போட்டியே விரும்பவில்லை
காதல் தோல்விகளை
விரும்புகிறேன்

உண்மையில் என்னை
காதலித்து ஏமாற்றினாயா?

இல்லை காதலிக்காமல்
ஏமாற்றினாயா?

உன்னை மீண்டும். மீண்டும்
சுற்றி வருவது யாரோ தரும்
இன்பத்தை விட
நீ தரும் துன்பமே போதும் என்று....

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000



# நீ தாய்க்கு செய்யும் துரோகம்..!

உன் காதல் தோல்வியால்
உன் காதலிக்கு வேறு
காதலன் கிடைக்கலாம்!

உன் தாய்க்கு உன்னைப்
போன்ற வேறு மகன் கிடைப்பானா?

உன் தாய் உயிர் தந்து
உன்னை வளர்த்தாளே!

உன் தாய் பத்து மாதம்
வயிற்றில் கருவறையில் சுமந்தானே.

நீ கருவறையில் போது
உன் தாய் புரண்டு படுத்தால்
நீ இறந்து விடுவாய் என்று
தூக்கத்தை கூட
தொலைத்து விழித்திருப்பாளே!

நீ தாயிடம் வார்த்தைகள்
இல்லாமல் பேசினாயே!
கண்கள் இல்லாமல்
ரசித்தாயே!
காற்றே இல்லாமல்
சுவாசித்தாயே

ஆனால் நீ உன் தாய்க்கு
கண்ணீரை மட்டும்
விட்டு சென்றாயே

உன்னால், உன் தாய்க்கு
கண்ணீர் தீரும் வரை
காயங்கள் ஆறாது?
காயங்கள் ஆறும் வரை
கண்ணீர் ஊறாது?

நீ மட்டும் மறுபிறவியில்
உன் தாய்க்கு செருப்பாக
இருக்க வேண்டும்.
காலில் மிதிபட அல்ல...
உன்னை சுமந்த அவளை
ஒரு முறையாவது
நீ சுமப்பதற்காக...

உன் தாய் தினமும்
உன் போட்டோவை வைத்து
உன்னை தெய்வம் என்று
கும்பிட்டு அழுது வருகிறாள்

அது வாழ்நாளில்
உனக்கு ஏற்பட்ட
இழுக்கு.

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# மரணமே... உனக்கு என்னை பிடிக்கவில்லையா..?

வாழ்க்கை என்னவென்று
அறிந்த பருவத்திலிருந்து
எவ்வளவோ வலிகள்....

ஆசைகள் கனவாகவே
கலைந்தது...

சொல்லமுடியாத
ஏமாற்றங்களும்
வலிகளும் வேதனைகளும்
துக்கங்களும் காயங்களும்
என்னுள் உண்டு....

நம்பிய எல்லாமே
ஏமாற்றம்,
நம்பிக்கை
துரோகம்....

ஏன் இந்த
வாழ்க்கை
வேண்டவே
வேண்டாம்....

மரணமே நீயாவது
எனக்கு
உண்மையாக இரு...
நான் மரணத்திற்கு பயந்து கொண்டு
உன்னிடம் பேசவில்லை
என் காதலுக்கு
காதலி கிடைக்க வேண்டும்
என்பதற்க்காக...........

மரணம் என்பது அனைவருக்கும்
வரும்
அதுவும் ஒரு நாள் மட்டும்
தான் வரும் ஆனால் எனக்கு
மட்டும் தான் தினம் தினம்
வருகின்றது!
உன் நினைவுகளால் ......

மரணம் கூட ஒரு சில
நொடிகளில் கொன்று
விடும் ஆனால் உன்
நினைவுகள் என்னை
ஒவ்வொரு நொடியும்
கொல்கிறது.

என் மரண தருணத்தில்
கூட என் எதிரியின் முன்பும்
துரோகியின் முன்பும்
நீ அழாதே
அவர்களுக்கு தேவை
என் மரணம் அல்ல
உன் அழுகை தான்.

உன் நினைவுகளையும்
உன் உறவுகளையும் மறக்க
மருந்து தேடுகிறேன்
இறுதியில் மரணமே
விடையாக வருகின்றது.

உண்மையாக பாசமும்
உன்னால்
மரண வலி
மட்டுமே எனக்கு
பரிசாக
கிடைக்கின்றது.

நான் மரணம் என்றால்
நான் பயந்து விடுகிறேன்
நான் இறந்து விடுவேன்
என்பதற்காக அல்ல

உன்னை பிரிந்து
விடுவேன் என்பதற்காக..!
மரணம் இல்லாமல்
வாழ ஆசை தான்
இந்த
உலகில் அல்ல !

உன் நினைவுகள் போதும்
என்று தான் வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்
ஆனால்
சில காயங்களும்
நினைவுகளையும் மறப்பதற்கு
மரணம் எனும் படுக்கையில்
ஏறினால் தான் முடியும் போல..!

நான் வெறுத்து ஒதுக்குபவர்கள்
நம் மீது உயிரே வைத்திருக்கார்கள்
என்று இப்போது
தெரிய வரும் போது
அது
மரண வலியை விட பெரிய
வலிகளை இருக்கிறது

இப்போது
காத்திருக்கிறேன்
மரணமே நீ என்னை
அழைத்து செல்ல
வருவாய் என்று....

எத்தனை முறை
உன்னை தொட்டு
சென்றேன்...

உனக்கும் என்னை
பிடிக்கிவில்லையோ...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000





# நீயும் பெண் தானே?

ஒவ்வொரு முறையும்
என்னை சத்திக்கும் போது...

களவாடி செல்கிறாள்
பணத்தை அல்ல
என் மனத்தை...

அவளை கண்டுபிடிக்கத்
தேடினேன்...

தண்டிப்பதற்கு அல்ல
சொந்தமாக்குவதற்கு.

கற்பனை கனவுகளை
கவிதை சிறைக்குள் அடைத்தேன்...

எங்கேயோ கடன் வாங்கி
கற்பனைக்கு வட்டியாக
கவிதை கொடுத்தேன்!

என் மௌன நதிகளை
காயப்படுத்தாமல்
சேமித்து வைத்த நினைவுகளை
கொஞ்சம் செலவு செய்தேன்...

கீழே விழுந்த நான்
சில மனிதாபிமானம்
உள்ள பெண்களை
உற்றுப் பார்த்தேன்
எனக்கு உதவவில்லை?

பிறகு காற்றின் கரம்பிடித்து
கவனமாக நடந்தேன்!

பெண்களை நினைத்து
என் மனது அழுதது...

அனைத்தையும் சொல்லும்
என் தாயிடம் கூட

சொல்ல முடியவில்லை
என் வலிகளை...

அன்பாய் கேட்கும்
என் நண்பர்களிடம் கூட

சொல்ல முடியவில்லை
என் வேதனைகளை...

ஆறுதல் தரும் கவிதைகளில்
கூட சொல்ல முடியவில்லை.

என் கண்ணீரை
புரியாமல் பார்க்கும்

உன்னிடம் கூட
சொல்ல முடியவில்லை என் காதலை...

பிறகு வானத்து நிலவில்
அவள் முகத்தை தேடினேன்...

உனக்கு காலும் இல்லை...
உனக்கு கையும் இல்லை..
ஆனால் மெல்லத் தவழ்கிறாய்

மேகம் விட்டு மேகம் மறைந்து
உன்னைத் தேட விடுகிறாய்

இந்த கண்ணாம்பூச்சி
விளையாட்டை எங்கு கற்றாயோ?...

உன்னை தேடும் என்னை
அழவைப்பதில் தான்
உனக்கு சந்தோசம் என்றால்...

என்றாவது ஒரு நாள்
உன்னை அழவைப்பேன்
என் கல்லறையில்.

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# என்னை மறக்கிறார்

குருவிகள் முட்டையிட்டு அடைகாப்பதால்,
குஞ்சு பொரிக்கிறது!

வெண்ணிலாவின் பாசத்தை என் நெஞ்சில்
அடைக்காப்பதால் என் நெஞ்சு வெடிக்கிறது!

என் நெஞ்சு வெடிக்கும் போதெல்லாம் என்
வெண்ணிலா வெளிப்படுகிறாள்!
என் மன மன்றத்தில் கவி படிக்கிறாள்!

என்னை மறக்கிறாள்

இந்நேரத்தில் உற்றுநோக்குங்கள்
அந்த மரக்கூட்டை

குஞ்சுகள் சிறகுகள் முளைத்து.
சிறகடித்து பறக்கிறது
அடைகாத்த தாய் குருவியை மறக்கிறது!

இந்நேரத்தில் உற்று நோக்குங்கள்
என் மனக் கூட்டை
என் வெண்ணிலா
சிறகடித்துப் பறக்கிறாள்...

அடைகாத்த
என்னை மறக்கிறாள்!

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000



# என் தட்டும் வயிறும் சோறில்லாமல்!



தொலைந்து போனேன்
தேடித் தொலைந்து போனேன்
எதிர்பார்த்து ஏமாந்து போனேன்
நேசித்து நொடிந்து போனேன்
என்னடா வாழ்க்கை என்றேன்
இனி எப்போதும் இறக்க துணிந்தேன்

போதி மரம் தேவையில்லை
நான் புத்தனாக போவதுமில்லை
துறப்பதற்கு ஒன்றும் இல்லை
துறவுகொள்ள போவதில் அர்த்தமில்லை

சிறுபிள்ளையாய் அழுது பார்த்தேன்
கேட்டது எதையும் தரவில்லை
அன்பாய் அழைத்து பார்த்தேன்
அவள் என்றும் வரவேயில்லை

கடன் வாங்கி காணிக்கைப் போட்டேன்
கண் திறந்து பார்க்கவே இல்லை
கண்ணீர் சிந்தி கல்லும் கரைந்திட
கல்லுக்குள் ஒளிந்திருக்கும் கடவுள்
கருணையின்றி இறுக்கிறார்

நான் முகம் கழுவுகையில் ஓடிய
தண்ணீரை பார்த்து திடுக்கிடுவிட்டேன்
நான்.
ஒவ்வொரு நாளும் இவ்வளவு அழுகையா
வேண்டாம் என்று
நான் நீரில் விடுகிறேன்

பிறகு...........
குருதிக்குடுவை நிறைய
பெருங்குணம் சுமந்தபடி
சமூகம் நோக்கினேன்,
தட்டிவிட்டபடி கையில்
சாக்குப்பை திணித்து
பணம் பொறுக்கும்படி
பரிவின்றி பணிக்கப்பட்டேன் !

உயர்கல்வி உடுத்தி
தெரு கடக்கும்போது
அழுத்தமாய் சிரித்தது
அழுக்குச் சமூகம் நீ
யாரென்பதை நின் முகம்
தவிர்த்து பண முகாமே
தீர்மானிக்கும் என்றபடி !

என் திறமைகளை
அளவீடு செய்ய மறுக்கும்
செவிட்டு உலகம்
செருப்பை உற்றுநோக்கி
என்னை கணிக்கிறது !

ஏறிஇறங்கிய உடுப்பற்ற
நான் ஏறஇறங்கவே
பார்க்கப் படுகிறேன் என்
அழுக்கற்ற அகம் பொசுங்க
பொய்த்தூய்மை தேடப்படுகிறது !

உண்மையை மதித்து
முதுகுக்குப்பின் ஒழித்து
போலிப் புன்னையோடு
காசோடு காதல்புரி உன்
நேர்மைக்கு தீயிட்டுவிட்டு !

பணக்கார காதல்களுக்கு
வாயிற்சீட்டும் ஏழைக்
காதல்களுக்கு வாய்ப்பூட்டும்
பட்டுவாடா செய்யப்படுகிறது
மேலும்சில காரணிகளோடு !

எங்கு திரும்பினும்
முகமதிப்பை மிதித்தபடி
பணமதிப்பை கேட்கும்
சமூகம் எனைத்தள்ளிய
இடம்தோறும் எனைப்போன்றே
பணப் பொறுக்குப் போருக்கு
பழக்கபடாத முகங்கள் !

ஓர் நாள் விடியும்
என்ற நம்பிக்கையை
நெஞ்சிலும் வறுமையை
முதுகில் சுமந்தபடி
வானவில் ரசிப்பதெப்படி...?
நிறைய அழு கண்ணீர்
கல்லறை கூட
சில்லறை இருந்தால்
வாய் திறந்தே மொழி பேசும்

இல்லாதவன் சொல்
சபையேறாமல்
ஏளனமாகப் பேசும்.."

தெய்வமே,
உன்னை என் இதயத்திலிருந்து
வெளியேற்றிவிட்டு,
ஒரு பெண்ணைக்
குடிவைத்ததற்காகக்
கோபித்துக்கொண்டு
என்னைக் கைவிட்டு விடாதே!

சுத்தம் சோறு போடும்
என்கிறீர்கள் !

இன்றுவரை
சுத்தமாகத்தான் இருக்கிறது

ஆனால்.....

என் தட்டும் வயிறும்
சோறில்லாமல் !

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# பெண் சிசுவின் புலம்பல்



அன்புள்ள அம்மா, அன்புள்ள அப்பா...
நான் தற்போது எமனின் மடியில்
விளையாடிக் கொண்டிருக்கிறேன்.

கடவுளால் படைக்கப்பட்ட மனிதன்
கடவுளை படைப்பதாச் சொல்லி என்னை
உன் கருவறைக்குள் பிரவேசிக்கச்
செய்தார் கடவுள்!

கருவறை தோறும் கடவுளுக்கு
குழந்தை தானம்!

கடவுள் காலடியில் கிடக்கும்
மலரைப் போல
உன் கருவறையில் தங்கினேன்!

அம்மா நீ கோவில்
ஆனால் கடவுள் எங்கே என்ற
கேள்வியுடன்?

சந்தோசமாக உன் கருவறையில்
முதல் மாதம் வளரத் தொடங்கினேன்
இரண்டாம் மாதம் நீ - சிரிக்கும் போது
நானும் சிரித்தேன்!

நீ அழும்போது நானும் அழுதேன்!
நீ இமைக்கும்போது நானும் இமைத்தேன்!
நீ தூங்கும்போது நானும் தூங்கினேன்...

பிறகுதான் புரிந்தது நீ அம்மா
நான் குழந்தை என்ற புது உறவு!

மூன்றாம் மாதம் உன் நினைவுகளை
தாலாட்டு பாடியே என்னைத்
தூங்க வைத்தாயோ!

நான்காம் மாதம் உன் இதய சத்தம்
தாலாட்டு சத்தமாக கேட்டு
நான் தூங்கிவிடுவேன்!

ஐந்தாம் மாதம் ஆசையாய் கருவறையில்
விளையாடிக் கொண்டிருந்த என்னை
தலைவிதி என்னுடன் விளையாட ஆரம்பித்தது!

என்னை ஸ்கேனில் பரிசோதித்த போது
நான் பெண் குழந்தை என்று ஒரு அரக்கன்
சொன்னது என் காதில் விழுந்தது!

அப்பொழுது தான் ஒரு தீராத வலி
என்னை உட்கொண்டது
நான்...
பெண் குழந்தையாம்...

அதனால்
அரக்கன் பேச்சைக் கேட்டு என்னை
கருக்கலைப்பு செய்யப்
போகிறார்களாம்!

என் உடல் அசைவுகளை செயலிழக்க
செய்யப் போகிறார்களாம்!
என்னைச் சிதைக்கப் போகிறார்களாம்...

ஐயோ கடவுளே...
அரக்கன் கொட்டத்தை
அடக்க மாட்டாயா?

நான் உருகிக் கொண்டிருக்கிறேன்!
ஓரிரு நொடிகளுக்குள் என்
போராட்டம் முடிவிற்கு வரப்போகிறது.

கடவுள் என்னிடம்
உன் அம்மாதான்
கடவுள் என்று என்னிடம்
சொல்லியிருந்தார்.

அப்படியானால் அம்மா
இன்னொரு கடவுளா?

என் அன்புள்ள அப்பா
நீயும் இதுக்கு உடந்தையா?

நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது
நான் கொஞ்சம் கொஞ்சமாக
உயிர் இழந்தேன்!

அம்மா
உன்னைப் பார்க்காமலேயே பிரிகின்றேன்...

எனக்குப் பிடித்தமான
கருவறையை விட்டு...



- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# நிலவே நீயுமாய் என்னை எமாற்றுகிறாய்....?

ஒவ்வொரு முறையும் என்னை
சந்திக்கும் போது...

களவாடி செல்கிறாள்
பணத்தை அல்ல
என் மனத்தை...

அவளை
கண்டுபிடிக்கத் தேடினேன்...

தண்டிப்பதற்கு அல்ல
சொந்தமாக்குவதற்கு

கற்பனை கனவுகளை
கவிதை சிறைக்குள் அடைத்தேன்...

எங்கேயோ கடன் வாங்கி
கற்பனைக்கு வட்டியாக
கவிதை கொடுத்தேன்!

என் மௌன நதிகளை காயப்படுத்தாமல்
சேமித்து வைத்த நினைவுகளை
கொஞ்சம் செலவு செய்தேன்...

கீழே விழுந்த நான்
சில மனிதாபிமானம் உள்ள
பெண்களை உற்றுப் பார்த்தேன்
எனக்கு உதவவில்லை?

பிறகு காற்றின் கரம்பிடித்து
கவனமாக நடந்தேன்!

பெண்களை நினைத்து
என் மனது அழுதது...

அனைத்தையும் சொல்லும்
என் தாயிடம் கூட
சொல்ல முடியவில்லை



என் வலிகளை...

அன்பாய் கேட்கும்
என் நண்பர்களிடம் கூட
சொல்ல முடியவில்லை
என் வேதனைகளை...

ஆறுதல் தரும் கவிதைகளில் கூட
சொல்ல முடியவில்லை
என் கண்ணீரை
புரியாமல் பார்க்கும்

உன்னிடம் கூட
சொல்ல முடியவில்லை
என் காதலை...

பிறகு வானத்து நிலவில்
அவள் முகத்தை தேடினேன்...

உனக்கு காலும் இல்லை...
உனக்கு கையும் இல்லை...
ஆனால் மெல்லத் தவழ்கிறாய்


மேகம் விட்டு மேகம்
மறைந்து உன்னைத் தேட விடுகிறாய்

இந்த கண்ணாம்பூச்சி
விளையாட்டை எங்கு கற்றாயோ?...

உன்னை தேடும் என்னை
அழவைப்பதில் தான்
உனக்கு சந்தோசம் என்றால்...

என்றாவது ஒரு நாள்
உன்னை அழவைப்பேன்
என் கல்லறையில்.


- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000



# என்னை முளைக்க விடுங்கள்!

நான் முளைத்து இருக்கிறேன்.
என்னை வெட்டி விடாதீர்கள்!

நான் இப்போது மலர்ந்து இருக்கிறேன்
பூவிலேயே பறித்து விடாதீர்கள்
நான் காய்க்க வேண்டியிருப்பதால்,

என்னை காயிலேயே பறித்து விடாதீர்கள்
நான் கனிய வேண்டி இருப்பதால்
கனியை பறித்து தின்னுங்கள் ஆனால்
விதையை தின்று விடாதீர்கள்!

நான் மீண்டும் முளைக்க வேண்டியிருப்பதால்
என்ற வேண்டுதலுடன் துவக்கும்...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# நான் எத்தனை தடவை அழுதேன் தெரியுமா

அன்பே!
நான் தினமும் உன்னை
பின் தொடர்ந்து வருவது
எதற்கு தெரியுமா?

உன் அழகு நிழல்
என் மீது விழ வேண்டும் என்று
நான் எத்தனை தடவை
அழுது இருக்கிறேன் தெரியுமா?

நான் நீ உன் வீட்டை வெளியே
செல்லுமுன் விளக்கை யெல்லாம்
அணைத்து விட்டு இருட்டாக்கி போவது

நீ வெளியூருக்கு சென்ற பிறகு
உலகத்தை இருட்டாக செய்து
விட்டு போகிறாய் என்று.
நான் எத்தனை தடவை
அழுது இருக்கிறேன் தெரியுமா?

உன்னிடம் நான் பல தடவை
என் இதயம் காற்றின்
சுவாசத்தால் துடிக்கவில்லை
நீ என் மீது வைத்து இருக்கிற
பாசத்தால் என் இதயம் துடித்துக்
கொண்டு இருக்கிறது என்று.
நான் எத்தனை தடவை
அழுதிருக்கிறேன் தெரியுமா?

அன்று மாலை பொழுதில்
நான் உனக்கு முன் உயிர்விட்டால்
எனக்கு முன் நீ அழும் போது
அப்போது நம் காதல் கரையட்டும் என்று
நான் எத்தனை தடவை
அழுதிருக்கிறேன் தெரியுமா?

ஒருவேளை எனக்கு முன்
நீ இறந்தால்
உனக்காக ஓர் அழகான
கல்லறை கட்டுவேன்

அந்த கல்லறையை
நானே வடிவமைத்து
அந்த கல்லறையை
நானே கொத்தனாராகவும்
வேலை செய்து, அந்த கல்லறையை
கட்டி முடித்ததும் பிறகு
இது மாதிரியான கல்லறையை
வேறு யாருக்கும்
நான் கட்டி கொடுக்க கூடாது
என்பதற்காக நான்
என் உயிரை மாய்த்து
என் காதலி கல்லறையின்
அருகில் கட்டி பிடித்து
உயிரை விட்டு விடுவேன்...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# நான் உன்னை காதலிக்கிறேன்..!

நீ பஸ் ஸ்டாப்பில் நின்று
கொண்டிருக்கும் போது
தெரிய வேண்டாமா?
நாள் உன்னை
காதலிக்கிறேன் என்பது.

நீ வீட்டுக்கு சென்றுகொண்டு
இருக்கும் போது உன் தெருவில்
இருக்கும் நாய்கள்
நீ வந்து கொண்டிருக்கும் போது
குரைக்கிறது என்று
நீ என்னிடம் சொல்லி அழுத பிறகு
உன் புகைப்படத்தைப்
பெற்றுக் கொண்டு போய்
உன் தெருவில் இருக்கும்
நாய்களிடம் உன்
புகைப்படத்தைக் காட்டி
இனி முறைக்கக் கூடாதென்று
மீரட்டியது இதிலிருந்து உனக்கு
காதலிக்கிறேன் என்பது

ஆரம்பத்தில் உள்த்தில்எனக்கு
பிடித்த விளையாட்டுத்தனம்
தான் உல்விளைபாடச்
அதனால் தான் கொடுத்து விட்டேன்
என் இதயத்தை இதிலிருந்து உனக்கு
தெரிய வேண்டாமா?
நான் உன்னை காதலிக்கிறேன் என்பது.

நீ என் முன் நின்ற போது.
என் உடலில் விழுந்த உன் நிழலை
அப்படியே சேமித்து
வைத்துக்கொள்ள தெரியவில்லையே
என் உடம்பிற்கு என்று
எத்தனை தடவை சாட்டையால்
என் உடம்பை பலமுறை
காயப்படுத்தியிருக்கிறேன்.
இதிலிருந்து உனக்கு தெரிய வேண்டாமா
நாள் உன்னை காதலிக்கிறேன் என்பது.

நீயும் நானும் உட்காரும் போது
நமக்குள் கொஞ்சம்
இடைவெளி வீட்டு
உட்காரும் போது உன்னை
தொட்டுவிடக்கூடாது
என்பதற்காக இல்லை.
நம்மிடையே
காதல் அமர வேண்டும்
என்பதற்காகத்தான்
இதிலிருந்து உனக்கு
தெரிய வேண்டாம
நான் உன்னை காதலிக்கிறேன் என்பது.

பிறக்கும் போது உன் அம்மாவின்
வயிற்றை கத்தியால்
கிழிக்கப்பட்டு பிறந்தேன்
என்று நீ அழுதபோது தாள்
உடனே என் கவிதை மூலம்
உன்னை நொடிக்கு நொடி
சுகப்பிரசவமாக
சுவாசிக்க வைத்தேன்
இதிலிருந்து உனக்கு தெரிய
வேண்டாமா? நான் உன்னை
காதலிக்கிறேன் என்பது.

உன் பெயர் சூட்டப்பட்டுள்ள
எந்த கடைகளை நான் பார்த்தாலும்..
ஏதாவது ஒரு பொருளை
வாங்கிவிடுவேன்
இன்று ஒரு சவத்தேரில்
உன் பெயர் சூட்டப்பட்டுள்ளதால்
நான் பிணமாக
ஆவதற்கு ஆசைப்பட்டு
என்னைக் கொன்று விடுங்கள்...
கொன்று விடுங்கள்...
என்று கூச்சலிட்டு
இதிலிருந்து உனக்கு
தெரிய வேண்டாமா?
நான் உன்னை காதவிக்கிறேன் என்பது!

– M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# இன்னுமா நம்பவில்லை...

நீ என்னை கோயிலுக்கு
அழைத்த போது
எனக்கும் சேர்த்து தான்"
நீ வேண்டிக்கொள்ளப் போகிறாய்

"நான் எப்போதுமே
உனக்காக மட்டும் தான்
எனக்காக என்றால்,
நீ வந்து வேண்டிக் கொள்
என்று சொல்லிக்கொண்டு
என்னை கோவிலுக்கு
அழைத்துச் சென்றாய்
அப்போது நீ அர்ச்சனை
செய்யும் போது சாமி சிலைக்கு
உயிர் வந்து விட்டு போகிறது
என்று பூசாரி சொன்னது
இன்னுமா நீ நம்பவில்லை?

பிறகு அம்மனுக்கு
உன் அழகு மீது பொறாமை
அதனால் தான்
அதனை வணங்கும் போது
பதிலுக்கு அது
வணங்குவது இல்லை என்று
பூசாரி சொன்னதை
இன்னுமா நீ நம்பவில்லை?

நீ தினமும் கோயிலுக்கு
சென்று பிள்ளையாரை
வணங்கி விட்டுதான்
வேளைக்கு செல்கிறாய் என்றாய்..
அப்பொழுது சாமிக்கு
உன் மீது வருத்தம்
ஒரு நாள் கூட
நீ வேலைக்கு செல்லும் போது
சாமியை அழைத்து
செல்லவில்லை என்று
சாமியே வருத்தப்பட்டதாக
பூசாரி சொன்னதை இன்னுமா
நீ நம்பவில்லை?

நான் உன்னை பற்றி
எழுதிய கவிதை புத்தகத்தை
கோவிலுக்கு சென்று அர்ச்சனை
செய்யும் போது இவ்வளவு
அழகான தேவதையைப்
பற்றி இவ்வளவு
சுமாரான கவிதைகளில்
உன்னால் எழுத முடிந்தது
என்று சாமி அருள்வாக்கு
சொன்னதாக பூசாரி சொன்னதை
நீ நம்பவில்லையா?

எப்போதும் நீ இருக்கும்
இடத்தில் காற்று
வேகமாக அடித்தபடி
இன்னுமா நீ நம்பவில்லை?
உன் ஆடையோடு
விளையாடுவதை பார்த்து
தான் சந்தேகம் அடைந்து
அழைத்துச் சென்று
காற்று உன்னை
களவாடுகிறதோ என்று

நினைத்து கோவிலுக்கு
பூசாரி வைத்து யாகம்
செய்தது இன்னுமா நீ நம்பவில்லை?

என்னால் தினமும்
கவிதை தான் எழுத முடியும்
உன்னை மாதிரி
கவிதையாக
இருக்கமுடியவில்லையே
இன்று எத்தனை
தடவை அழுதீர்கள் தெரியுமா

கோவிலுக்கு சென்று
பூசாரி பார்த்து
நான் அழுகின்ற போது
இன்னுமா நீ நம்பவில்லை?

கண்கள் கூசாமல்
சூரியனை பார்ப்பதற்கு கூட
முக கண்ணாடி உதவுகிறது
ஆனால் உன்னை கண்களால்
கூசாமல் பார்க்க
எதுவுமே உதவுவதில்லை
என்று நான் கோவிலுக்கு
சென்று பூசாரியிடம் சென்று.
அழுகின்ற போது...
இன்னுமா நீ நம்பவில்லை?
நான் உன்னை காதலிக்கிறேன் என்று

நீ ஜவுளிக்கடைக்கு சென்று
ஒரேயொரு புடவை
வாங்கிக்கொண்டு
பேசாமல் வந்துவிட்டாய்
பிறகு அனைத்து புடவைகளும்
கோவிலுக்கு வந்து
பூசாரியிடம் கூடி அழுவதைப்
பார்த்தும் இன்னுமா நீ நம்பவில்லை?



- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# எப்போது வருவாய்..?

தொலைத்து விட்டு அழகிறேன்
இப்போது என்! கண்ணீர
துளிகள் அனைத்தும்
என் கண்களில் இருந்து
முத்தமிட்டு என்னை
குளிப்பாட்டிக் கொண்டு இருக்கிறது.

அவளோடு உயிரோடு உருகினோம்
உயிரோடு பருகினோம்
போனில் சலிக்காமல்
சண்டையிட்டோம்
ஒற்றுமையோடு வாழ
முயற்சி செய்து
தோற்றுப் போனோம்!

கனவுகளை தொலைத்து
கவிதைகள் தேடினேன்!
கண்ணீரை தொலைத்து
காயங்களை தேடினேன்!

இரவுகளை தொலைத்து “
நிலவுகளை தேடினேன்!
இமைக்குள் தொலைந்து
விழிக்குள் தேடினேன்!

உடலுக்குள் தொலைந்து
இதயத்தை தேடினேன்!
லோகத்துக்குள் தொலைந்து
அவளை தேடினேன்!

ஆனால்
வந்ததும் போய்விட்டாய்!
இப்பொழுது
என் கண்ணீர் வந்துவிட்டது

உன் கண்களை
கொஞ்சம் தா
அழுது விட்டு தருகிறேன்!

நானும் அழகானவர்கள்தான்.
நீயும், அழகானவள் தான்
ஆனால்
நீ கண்ணீரால்
அலங்கரிக்கிறாய்

நான் என் காயங்களால்
அலங்கரிக்கிறேன்.

இப்பொழுது
என் நீயும் கிடைக்கவில்லை!
உன் காதலும் கிடைக்கவில்லை!
உன் பாசமும் கிடைக்கவில்லை!

நீ என்னுடன் இருந்த போது
நான் என்னிடம் இருந்தேன்!
நீ என்னிடம் இல்லாதபோது
நான் என்னிடம் இல்லை!

நீ பூத்தபோது நான்
பார்க்கவில்லை!

நீ பார்த்த போது
நான் பூக்கவில்லை!
நீ தேடிய போது
நான் கிடைக்கவில்லை!

நீ கிடைத்தபோது
நான் தேடவில்லை!
நீ சிரித்த இடமெல்லாம்
நான் சிதறி கிடக்கிறேன்!

நீ பூப்பறித்த இடமெல்லாம்
நான் புலம்பி திரிகிறேன்!

மரணத்தின் வலி
காதலுக்கு தெரியும்!
காதலின் வலி
மரணத்திற்கு தெரியும்!

தயவு செய்து
என்னை காதலித்து
ஒரு பைத்தியத்தின்
எண்ணிக்கையை உலகில்:
குறைத்து விடு!

இப்பொழுது காதல் கவிதையும்
எனக்கு நன்றாக வருகிறது!
நான் முழு நேர
பைத்தியக்காரனாகி
முழுத் தகுதியோடு இருக்கிறேன்!

தற்கொலைக்கு முயற்சித்தேன்
காதலைப் போலவே
அதிலும் தோல்விதான் கிடைத்தது!

நான் தற்கொலை
செய்து கொண்டால்
அன்று நீ தாமதமாகவேவா
மரணத்திற்கு பிறகும்
உனக்காக காத்திருந்த பெருமை
எனக்கு கிடைக்கட்டும்!

என் இறுதிச் சடங்கில்
லந்து கொண்டால்
என் சட்டையை தேடிப் பாருங்கள்
நிச்சியம் அதில் நான்
அவளுக்கு எழுதிய
என் கடைசி கவிதை இருக்கும்
அதில் எல்லா கவிதைகளும்
கடைசி வரி அவளாகத்தான் இருக்கும்
அப்பொழுது
என் சவ ஊர்வலத்தில்
மலர்களை தூவுவதற்கு

அவளின் கூந்தலுக்கு
பூக்களை கட்டிக் கொண்டு
வரச் சொல்லுங்கள்

சரி விடு

ஆறாத காயம் தந்த நீ வாழ்க!
தீராத காதல் தந்த நீ வாழ்க!
வாழ்க்கை உனக்கு!
மரணம் எனக்கு!

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# மீண்டும் எனக்கு பயம் வந்து விட்டது...

என் அலுவலகத்தில்,
உன் புகைப்ப நண்பர்கள்
இந்த புகைப்படம் தேவைதை
என்றார்கள்

நான் எப்படி என்றேன்
தேவதைகள் இமைகளை
இமைப்பது இல்லை
என்று படித்து இருக்கிறேன்.

இந்தப் புகைப்படமும்
ஒருமுறை கூட
இமைகள் இமைத்து
பார்க்கவில்லை என்றார்கள்.

அப்பொழுது
என் நண்பர்கள் சொல்வது
உண்மைதான்

ஏன் என்றால்...
அவளின் புகைப்படத்தை
நான் உற்று பார்த்தபோது

என் கண்கள் இமைக்க
மறுத்து விடுகின்றன.
நாள் அதிர்ச்சி அடைத்து
இவளை நேல்தைகளின்
என்றாலும்..

தேவதையில் எப்படி காரவிப்பது
என்று நான் கவலை அடைந்து
என்னை காதல்
போய்விடுவாளா?

என்கிற
அழகிய பயம் வந்தது
எனக்கு

எப்படியாது அவன் என்னை
பார்க்கையில் ஒரு முறையேனும்
கூர்ந்து பார்த்து இமைகளை
இமைக்கும் போரு
நீ பெண்தான் என்பதை
அவளுக்கு புரிய
வைத்து காதலைச் சொல்ல
வேண்டும் என்பதற்காக
எனது அலுவலகத்தில்
புகைப்படத்தை திருடி வந்தேன்.
ஆனால் வெட்கல் கெட்ட
என் கண்கள்
இந்தப் புகைப்படத்தை
இமைக்காமல்
பார்த்துத் தொலைக்கிறது

மீண்டும் எனக்கு
பயம் வந்து விட்டது

ஏன் என்றால்...
அவள் குனிந்து கூட்டும் போது
அவள் முன்னழகுகளை
ரசிக்க மூலை முடுக்கிலிருந்து
குப்பைகள் எல்லாம்
ஓடி வந்து அவள் முன்னால்
குவிகின்றன

அதை வெளியில் கூட்டித்
தள்ளி விட்டு அவள்
திரும்பும்போது அவளின்
பின்னழகை ரசித்துக்
கொண்டே மீண்டும்
வீட்டுக்குள் குப்பைகள்
வந்து விடுகின்றன
மீண்டும் எனக்கு
பயம் வந்துவிட்டது.

இவள் கூடப் பேசிக் கொண்டு
இருக்கும்போது
இவளை கடிக்கும் கொசு கூட
தேனியாக மாறிவிடுகிறது.
இவளை பற்றி கவிதைகள்
எழுதி என் கடைவாயில்
ஒளித்து வைக்கும்
போது கவிதைகள்
என் முகத்தில்
முகப்பருக்களாக
முளைத்து விடுகின்றன...

மீண்டும் தேவதை
என்று அழகிய பயம் வந்தது எனக்கு...



- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# அழகே அடக்கி வை

வெகு காலமாய்
உன்னை சுற்றி, சுற்றி
நான் வந்த போது
ஏன் என்னை தினமும் சுற்றுகிறாய்
என்று நீ கேட்டாய்?

அப்போது நான் நெஞ்சுவலியில்
துடித்து அப்படியே விட்டேன்.
உடனே நீ பதறிப்போய்
ஏன் உனக்கு என்னாச்சி என்றாய்?

அப்போது நான் கோவிலுக்கு
சென்று அம்மனை சுற்றிக்கொண்டு
இருக்கும் போது
ஏன் என்னை சுற்றுகிறாய்
என்று அந்த அம்மன் கேட்டால்?

பக்தனுக்கு நெஞ்சுவலி
வராமல் என்ன செய்யும் என்று..

நான் சொல்லிக்கொண்டு
இருக்கும் போதே..
நீயும் தெய்வத்தை போல் மறைந்து

பிறகு நீ பிள்ளையார்
கோவிலுக்குப் போய் விட்டு
வரும் போதுஇனிமேல்
ஆண் சாமிகள் இருக்கும்
கோவிலுக்கு போகாதே என்றேன்.
உடனே என் என்று நீ பதறி கேட்டாய்?

நீ கண்ணை மூடி அந்த பிள்ளையாரை
வணங்கும் போது
அந்த தெய்வம் கூட
கண்ணைத் திறந்து
ரசிக்கிறார் என்றேன்...

அட... ஆண்டவா என்று
சொல்லிக் கொண்டு ஓடி விட்டாய்.

அன்று இரவு விழிப்பு
நீ எழுந்து பார்த்த போது
அப்போது உன் அருகில்
நான் உன்னை பார்த்தபடி
அமர்ந்திருந்தேன்
அப்போது நீ என்னை
தூங்கவில்லையா என்றாய்?

முதலில் உன் அழகெல்லாம்
தூங்க வைத்துவிட்டு
அப்புறம் நீ தூங்க வேண்டும் என்றேன்.

பிறகு அதிகாலையில்

நான் ஆசையாய் வாங்கி
தந்திருந்த ஒரு அன்பளிப்பை
நீ எதார்த்தமாய்
உடைத்து விட்ட போது
அழுகை வந்துவிட்டது உனக்கு.

அப்போது நான்,
நீ சிந்தும் கண்ணீர்த்துளிகளே
என் உள்ளங்கையில்
நான் ஏந்தியபடி
விலை மதிப்பில்லாத
உன் கண்ணீர்த்துளிகள்
என் கையில் உடைகிறதே...
உடைகிறதே என்று கூச்சலிட்டேன்...

விழித்த பிறகுதான் தெரிந்தது
எல்லாம் கற்பனை என்று...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# தீவிவாதிக்கு வேண்டுகோள்...



நான் இறப்பதற்கு தயார்
உயிர்கள் மீது
நான் அன்பு செலுத்தவில்லை!

நான் இறப்பதற்கு தயார்
நீ என் குடும்பத்தைச்
சுமப்பதென்றால்!

மரணம் எல்லாருக்கும் பொது
தீயும் மரணிப்பாய்!
அப்போது
மரணத்தின் வலி
உனக்குத் தெரியும்!

தீவிரவாதி என்று
கூறிக்கொள்ளும் நீ
தையிரியம்மிருந்தால்
என் கல்லறையில்
மலர் வைத்துப்பா!

இனிமேலாவது
உன் கைய்
மலர்களைத் தூக்கட்டும்!

உன் கைகள் வெடி
தொடாதக்கு
அப்போதாவது உனக்கு
உயிரின் வலியும்,
அன்பின் மென்மையும்
அறிவாய் நீ?

உன் வெடிக்குண்டு சத்தமானது
என் குடும்ப அழுகைச்
சத்தத்திற்கு ஈடாகாது!!

அன்பைக் கற்றுத் தர
உனக்கு அன்னை இல்லையா?
அன்பு பாசமென்பதரிய
உனக்குச் சகோதரி இலலையா

சரி விடு

உன் பிள்ளையையாவது
உன் போல் அல்லாது
நல்ல பாதையில்
வாழ வை.

என் மரணம்
உன்னை மாற்றட்டும்!!

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000




வெளியீடு:
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்,
மனித உரிமைகள் மீட்பு.
தொடர்புக்கு: 95434 10000